Lifeline

மீண்டும் வாழ்வோம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No76 Pages 4 | Sunday, 06 April 2008 | Free Copy

மாற்றுமொழி கற்கைகளுக்கான முன்னெடுப்புகள் இனப்பிரச்சினைக்கு தீர்வாகுமா ?

இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையின் வேராக மொழிப் பயன்பாடே காணப்படுகின்றது

இலங்கையில் வாழும் பெரும்பான்மையின சிங்கள மக்களுக்கும் சிறுபான்மையின தமிழ் பேசும் மக்களுக்கும் இடையிலான மொழித் நிலைகளின் ஆரம்பம் தமிழ் மொழி அமுலாக்கலில் ஏற்பட்ட தடை தான் என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து

பகிர்ந்துகொள்ளக்கூடிய எமது எதிர்காலத்தை நோக்கி...

இலங்கை அரசாங்கம் தற்போது பெரும்பான்மையின சிங்கள 1000 அரசாங்க அதிகாரிகள் 1000 பேருக்கு தமிழ் மொழியினை கற்பிக்கும் நடவடிக்கையினை ஆரம்பித்துள்ளது

இது குறித்து வொயிஸ் ஒப்ப அமெரிக்காவின் செய்தியாளர் றேமன்ட் திபோடியகல் ஆய்வு கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார்.

அந்த கட்டுரையில் இலங்கையில் 25 வருடங்களுக்கும் மேலாக தொடரும் மோதல்களில் ஏறத்தாள 70 000 பொதுமக்கள் பலியானமைக்கான முக்கிய காரணம் மொழி அமுலாக்கமே என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.டி.குணசேகர இலங்கை மொழியினாலேயே பிளவுபட்டுள்ளதாகவும் மோதல் நிலை ஏற்பட இதுவே காரணம் என்றும் கூறியுள்ளார்.

தமிழ் மற்றும் சிங்கள மொழிகளுக்கிடையிலான இணைப்பை உரிய முறையில் ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைக்கு 60 வீதமான தீர்வினை காண முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள சிங்கள அரசாங்க அதிகாரிகளுக்கான தமிழ் மொழி கற்றல் திட்டத்தில் இணைந்து கொள்ளும் அதிகாரிகளுக்கு மேலதிகள கொடுப்பனவுகள் மற்றும் பதவி உயர்வுகள் என்பன கிடைக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் தமிழ் மொழி பேசும் அதிகாரிகள் சிங்கள மொழியை கற்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதோடு அவர்களுக்கும் சிங்கள அதிகாரிகளுக்கு வழங்கப்படுகிற போன்ற சிறப்பு சலுகைகளை அரசாங்கம் அறிவித்துள்ளது.

தமிழ் மொழி பேசும் ஒருவர் அரசாங்க திணைக்களத்திற்கு ஒரு கடிதத்தை அனுப்பினால் அவருக்கான பதில் சிங்களத்திலேயே அனுப்பி வைக்கப்படுகின்றது இதனால்இந்த நாட்டுள் இரண்டாம் தரப் பிரஜை என்ற எண்ணம் அவர் மனதில் ஏற்படுவதாகவும் இதுவே பின்னர் முரண்பாடாக மாற்படைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்

19ம் நூற்றாண்டில் பிரித்தானியாவின் காலனித்துவ நாடாக இலங்கை இருந்த போது பிரித்தானிய ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் அதிகாரிகளின் மூலமாகவே தமது நிர்வாகத்தை நடத்தி வந்ததாகவும்இலங்கை சுதந்திரமடைந்தத அடுத்து இந்த நிலை மிகக் குறுகிய காலத்தில் இந்த நிலைமை மாற்றமடைந்து சிங்கள மொழி நிர்வாக மொழியாக மாறியதாகவும் குறிப்பிட்டுள்ளார்

மேலும் இலங்கையில் இனப்பிரச்சினைக்கான அடிப்படையாக மொழி அமுலாக்கம் இருந்த போதிலும் தற்போதைய பிரச்சினை அதுவல்ல என மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வொயஸ் ஒப் அமெரிக்காவின் செய்தியாளரிடம் கூறியுள்ளார்

> தற்போது தமிழ் மக்கள் வாழ்வதற்கான உரிமைக்காகவே போராடி வருவதாகவும் அவர்களுக்கு மொழி அமுலாக்கம் என்பது இன்றைய நிலையில் கவனம் செலுத்தக் கூடிய பிரச்சினை அல்ல என்றும் கூறினார்

தற்போது தமிழ் மக்கள் வாழ்வதற்கான உரிமைக்காகவே போராடி வருவதாகவும் அவர்களுக்கு மொழி அமுலாக்கம் என்பது இன்றைய நிலையில் கவனம் செலுத்தக் கூடிய பிரச்சினை அல்ல என்றும் கூறினார்.

அந்தஸ்தை பெற்றது என்றும் அமைச்சர் குணசேகர தெரிவித்துள்ளார்

எனினும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அடிப்படையாக மொழி அமுலாக்கம் இருந்த போதிலும் தற்போதைய பிரச்சினை அதுவல்ல என மேலக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் வொயஸ் ஒப் அமெரிக்காவின் செய்தியாளரிடம் கூறியுள்ளார்

> மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் இரவு 9.45 முதல் 10.15 வரையும் புத்தளம் பிரதேசத்தில் அறுநூர் எப்.எம்.(FM 96.1 Mhz) வானொலி ஊடாக ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 முதல் 7.15 வரையும் ஒலிபரப்பாகின்றது. எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

உங்கள் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

பிறந்த நாள் உங்கள் திருமண நாள்களையும் உங்கள் பயணப்படங்களையும் எமக்கு எழுதி அனுப்பவும். அவற்றை மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கிறோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
www.lifelinesrilanka.com info@lifelinesrilanka.com

சுவடுகள்

★ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC (118 ஆவது 06-13 மார்ச் மாதம்) அறிக்கையின் படி இலங்கையில் 72,368 குடும்பங்களைச் சேர்ந்த 262,887 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

★ கர்ப்பினிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் MCN திட்டத்தின் கீழ் உள்ளடங்கும் 5 வயதிற்கு குறைவான சிறார்களுக்கான CSB உணவிற்கு நட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக உலக உணவு ஸ்தாபனம் அறிவித்துள்ளது. யாழ். மாவட்டத்தில் கோதுமை மாவிற்கான தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

எந்த ஒரு கொள்கலனும் அரசாங்கத் திடமிருந்து பெறப்படவில்லை. யாழ் மாவட்ட பேக்கரி களுக்கு பொருட்களை வழங்குவதற்கு அரசாங்க அதிபர் உலக உணவுத்தாபனத்திடமிருந்தே பொருட்களை பெற்றுள்ளார்.

★ மன்னார் அரசாங்க அதிபரின் அலுவலக அறிக்கையின் படி கடந்தவாரம் ஏற்பட்ட வெள்ளத்தினால் 11,033 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 12,067 ஏக்கர் விவசாய காணியும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது.

★ திருகோணமலை மாவட்டம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேறக்கூடிய இடங்களில் ICRC கருத்துக் கணிப்பீடு ஒன்றினை நடாத்தியுள்ளது. மீள்குடியேறும் மக்களுக்கு வாழ்வாதார வசதிகளை செய்து கொடுப்பதனை நோக்காக கொண்டு செய்யப்பட்ட இக்கணிப்பீட்டில் ஈச்சிலம்பற்று மற்றும் சேருவில பிரதேச செயலளார் பிரிவுகளைச் சேர்ந்த சில கிராமங்கள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

பேசும் படம்

படத்திலுள்ளது 300ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ள புத்தளம் சமாறுவா இடம்பெயர் முகாம். இதற்கு உள்ளூர் பள்ளிவாசலினால் நாளொன்றுக்கு மூன்று தடவை நீர் வழங்கப்பட்ட போதும் அதைப் பெற தலமும் பட்சத்தில் ஒரு மைல் தூரம் வரை நடந்து நீரைப் பெற வேண்டியுள்ளது.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புக்களின் ஒரு அங்கமாகும்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

வாழ்வின் வர்ணங்கள்

கடந்த 25 வருடங்களாக திருகோணமலை நகர மீன் சந்தையில் மீன் வியாபாரம் செய்யும் ஐயவீர தனது வாழ்வின் வர்ணங்களை இங்கு பகிர்ந்து கொள்கின்றார்.

முஸ்லிம், சிங்கள, தமிழ் மக்கள் என பல பிரிவினர் வாழும் இப்பகுதியில் எந்த வித பேதமும் இன்றி அனைவரும் ஒரு குடும்பத்தினர் போல் வாழ்வதாக தெரிவிக்கும் ஐயவீர இங்கிருந்து மீன் எடுத்து அப்படியே கந்தகாய் சென்று வருவதாக கூறுகின்றார். தற்பொழுது எந்த பிரச்சனையும் இல்லாமல் வாழுவது சந்தோஷப்படும் இவர் இங்கு வியாபாரம் நன்கு நடைப்பெறுவதாகவும் கூறுகின்றார்.

ஒரு முறை தன்னை ஒரு நாய் கடித்ததாகவும் அப்பொழுது முஸ்லிம் நண்பர்களே தன்னைத் தூக்கி மருத்துவமனைக்கு கொண்டு சென்று மருத்துவ உதவி செய்ததை ஐயவீர இங்கு நன்றியுடன் நினைவு கூறுகின்றார். தன்னுடைய சைக்கிளையும், மீன் பெட்டியையும் கூட அவர்களே வீடு கொண்டு வந்து சேர்த்ததாகவும் தெரிவிக்கும் ஐயவீர மக்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ நாட்டிற்கு சமாதானம் தேவை என விரும்புகின்றார்.

இடம்பெயர்வுகளால் இன்னல்களை எதிர்நோக்கும் இளம் சமுதாயம்

திருகோணமலை நகருக்கு சுமார் 100 கி.மி. தொலைவில் பட்டித்திடல் அகதி முகாம் அமைந்துள்ளது.

அந்த முகாமிற்கு நாம் சென்ற போது பாடசாலை முடித்து வந்த சிறுவர்கள் முகாமில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர்கள் விளையாட்டுத்திடலில் நடைப்பெறும் மாலை நேர வகுப்பிற்கு சமூகம் அளித்திருந்தனர்.

மாலை நேர வகுப்பில் கலந்து கொண்டிருந்த சிறுவர்களில் 14 வயதான ஜெயலவனிடம் இடம்பெயர்வுகளால் அவனது கல்வி செயல்பாடுகள் எவ்வாறு பாதிக்கப்பட்டிருந்தது என்று கேட்டோம்.

தனது சொந்த கிராமமான சம்பூரில் இருந்து அசம்பாதிங்கள் காரணமாக தான் முதலில் முகத்துவாரத்திற்கு பெற்றோரால் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் அங்கு

> கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த யுத்த நடவடிக்கைகள் காரணமாக ஜெயலவன் இதுவரை ஏழு தடவைகள் இடம்பெயர்ந்துள்ளதை அறியமுடிந்தததது

தான் பாடசாலைக்கு சீருடனையோ உரிய பாடப்புத்தகங்களோ இன்றியே சென்று வந்ததாக கூறினார்.

எனினும் அங்கும் எறிகணைகள் வரத் தொடங்கியதால் தான் அங்கிருந்து வாகரைக்கு இடம்பெயர்ந்ததாகவும் வாகரையில் இருந்து பின்னர் ஐயங்கேணிக்கு இடம்பெயர்ந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பட்டித்திடல் அகதிமுகாமில உள்ள சிறார்கள்

கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த யுத்த நடவடிக்கைகள் காரணமாக ஜெயலவன் இதுவரை ஏழு தடவைகள் இடம்பெயர்ந்துள்ளதை அறியமுடிந்ததது தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் மாணவர்களின் கல்வி செயல்பாடுகளை மிக மோசமாக பாதித்து வருகின்றன. ஜெயலவனின் கிராமம் உட்பட 3 கிராமங்களில் கல்வி தொடர்பான பிரச்சனைகள் காணப்படுவதாக அந்த கிராமங்களுக்கு பொறுப்பான கிராம அதிகாரி யோகராஜ் தெரிவித்தார்.

இடம்பெயர்வுகளின் போது சில சிறுவர்கள் எறிகணை தாக்குதலில் உயிரிழந்துள்ளதாகவும் உயிர் தப்பிய சிறுவர்களின் கல்வி நிலை மிகவும் மோசமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் Save the Children எளப்படும் அரசார்பற்ற நிறுவனம் வழங்கிய கல்வி உதவிகளை அடுத்து தற்போது 75 வீதமான முன்னேற்றம் இவர்கள் மத்தியில் காணப்படுவதாகவும் யோகராஜ் குறிப்பிடுகின்றார்.

மக்கள் தமது சொந்த இடங்களில் தமது உடமைகளை விட்டு இடம்பெயர்ந்து வந் ததால் அவர்களின் பிள்ளைகளை படிக்க வைப்பதற்கு போதுமான வசதி இல்லை என பெற்றோர்கள் கூறுகின்றனர்.

இங்குள்ள மாணவர்களுக்கு கொப்பி குடை காலணிகள் விளையாட்டுப் பொருட்கள் போன்றவற்றை Save the Children வழங்கிவருகின்றது.

ஏனைய மாவட்டங்களை விட திருகோணமலை மாவட்டத்தில் கல்விக்கான வசதிகள் குறைவாக காணப்படுவதால் அவற்றை முன்னேற்றுவதற்கும் இடம்பெயர்ந்த சிறுவர்களின் எதிர்காலத்திற்கு தேவையான கல்வியை வழங்குவதற்கு மான உதவிகளையும் இந்நிறுவனம் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது

சாளரம்

வட மாகாணத்தில் பல்வேறு பதுகீகளிலிருந்து 1990ம் ஆண்டளவில் இடம்பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்கள் தற்போது புத்தளம் மாவட்டத்தில் வசித்து வருகின்றனர். இடம்பெயர்து வாழ்ந்து கொண்டு இருக்கும் மக்களுக்கும் புத்தளத்தின் நிரந்தர வதிவிடவாளர்களுக்கும் இடையிலான உறவு பற்றி அம்மாவட்ட மக்கள் கூறிய சில கருத்துக்கள்:

மன்னார் காக்கயன் குளத்தில் இருந்து இடம்பெயர்ந்த இக்பாஜினி பேகம் இடம்பெயர்ந்த மக்களுக்கும் உள்ளூர் வாசிகளுக்கும் இடையில் நல்ல உறவு காணப்பட்டதாகவும் 1991ம் ஆண்டு இங்கு வந்த போது மிகவும் அன்போடும் ஆதரவோடும் அரவணைத்து தாங்கள் வாழ்வதற்கு செய்த வசதிகளை ஒரு நாளும் மறைக்கவோ மறக்கவோ முடியாது என தெரிவிக்கின்றார். மேலும் ஒரு சில தபாக்கள் மூலமாக தான் பிரிவு பற்றி பேசப்படுவதாகவும் ஏனையவர்கள் நல்லவர்களாகவே உள்ளார்கள் என்கின்றார்.

புத்தளம் கச்சேரியில் பொறியியல் பிரிவில் சாரதியாக உள்ள ஏம்.கக்கீர் மக்கள் ஒற்றுமையாக இருப்பதாகவும் அதேவேளை

மன்னார் காக்கயன் குளத்தை சேர்ந்த இக்பாஜினி பேகம்

சாதாரணமாக சில பிரச்சனைகள் இருக்க தான் செய்யுகின்றன என்றார். கடைகள், முச்சக்கர வண்டிகளுக்கு அகதிகளாக வந்தவர்கள் அவர்களுடைய ஆட்களையே தேடிக்கொண்டு போவது சில கசப்பான அனுபவங்களை தோற்றுவிப்பதாக கூறுகின்றார். மீன்னர் பாங்கு, மார்க்க சொற்பொழிவுகள் மூலமாக மக்கள் கொஞ்சம் திருந்தி ஒற்றுமையாக வாழ்வதாக தெரிவிக்கின்றார்.

சலாவுதீன் இக்பால். நான் தான் 2000ம் ஆண்டு இடம்பெயர்து வந்து. அங்குள்ள ஒரு பெண்ணை திருமணம் செய்து சந்தோஷமாக வாழ்வதாகவும் புத்தளத்தின் நிரந்தர வாசிகள் இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு வீடுகளை அமைத்து அவர்களது தோட்டங்களில் வேலைகளையும் கொடுத்து நல்ல வகையில் உதவியுள்ளனர் என்றும் மகிழ்ச்சியடைகின்றார்.

நீர் பயன்பாடும் மக்கள் மத்தியில் நீர் தொடர்பான விழிப்புணர்வுகளும்

கூடிநீர் இன்று ஓர் அருமையான பொருளாக மாறிவிட்டது. இவ்வுலகில் 6 பில்லியன் மக்கள் வாழ்கின்றனர். ஆனால் அன்னளவாக ஒரு பில்லியன் மக்களே தூய்மையான நீரை பெற்றுக் கொள்கின்றனர்.

வழக்கமாக குளாயை திறந்தவும் நீரைப்பெறுகின்றோம். ஆனால் உலகில் சில நாடுகளில் பெண்களும் குழந்தைகளும் 200 மில்லியன் மனிதர்யாலங்களை செலவிட்டே நீரை பெறுகின்றனர்.

இயற்கை எமக்களித்த மிக் முக்கிய கொடையாக கருதப்படும் நீரை பாதுகாக்கும் நோக்கில் உக்க நீர் தினம் சர்வதேச ரீதியில் 1993ம் ஆண்டு முதல் மாாச் மாதம் 20ம் திகதி முதல் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இலங்கையில் குளாய் மூலம் 32மூ ஆன மக்களே நீரைப் பெறுகின்றனர். இதற்காக அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்து வருவதாகவும் நீரை கத்தமாக்கும் முக்மாக மேற்கொள்ப்படும் வடித்தல், தொற்று நீக்குதல் இரசாயன பொருடகளை பயன்படுத்தி கிருமி நீக்குதல் போன்ற செயல்பாடுகளுக்கு அரசாங்கம் 300 மில்லியன் ரூபாய் நிதியினை வருடாந்தம் செலவிடுவதாக என நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் விதிபோக உதவி பொது முகாமையாளர் மொஹமட் அல்லா தெரிவிக்கின்றார்.

உலகில் இனம் காணப்பட்ட நோய்களில் 88மூ கத்தமான நீரை உட்கொள்ளாமையும் சுகாதாரமான கழிப்பிட வசதிகளை பயன்படுத்தாமையுமே காரணம் ஆகும்.

நெருக்கடி நிலைகளால் இடம்பெயரும் மக்கள் தற்காலிகமாக தங்கி வாழும் இடம்பெயர்ந்த முகாம்களில் நீரை வழங்கும் நடைமுறைகள் குறித்து அறிந்து கொள்ளும் நோக்கில் மூஞுலயூ புடி அமைப்பின் நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் எம்.யோகேஸ்வரனை தொடர்பு கொண்ட கேட்டோம்.

திருகோணமலையில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாமில் பவுசர் மூலம் நீரைப் பெறும் பெண் ஒருவர்.

சில இடங்களிலே சிரமங்கள் இருப்பதாகவும் நீர் வழங்கல் சில இடங்களிலே குறைவாக நடைபெறவுதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை மட்டக்களப்பில் எதிர்காலத்தில் நீர் பற்றாக்குறை ஏற்படாமல் தடுப்பதற்கும் முஞகயூ புடி நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.மக்கள் கத்தமான நீரை பெறுவதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கு குளாய் கிணறுகள் மற்றும் திறந்த கிணறுகள் போன்றவற்றை இந்த நிறுவனம் அமைத்துக் கொடுத்து வருகின்றது

எதிர்காலத்தில் கத்தமான நீரை பெறுவதில் ஏற்படக் கூடிய சிக்கல்கள் குறித்து நீர் வழங்கல அதிகார சபையின் அதிகாரி மொஹமட் அல்லா கருத்து வெளியிடும் போது இன்னும் 10 அல்லது 15 வருடங்களில் நகரமாக்கல் காரணமாக அதிகளவான மக்கள் நகர் புறங்களில்குடியேறும் சாத்தியங்கள் காணப்படுவதாகவும் இனதால் நீர் பயன்பாடு நகர் புறங்களில் அதிகரிக்கும் என்றும் இது மோசமான நீர் பற்றாக்குறை ஏற்பட காரணமாக அமையும் என்றும் தெரிவத்தார்.

தலைநகர் கொழும்பில் பகுதியில் கமார் 45 வீதமான நீர் வீண் விரயம் செய்யப்படுவதாகவும் இது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்த ஆகக் கூடிய வீதம் என்றும் இதை கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்

மக்கள் மிக அவதானத்துடன் முன்னெச்சரிக்கையுடன் செயற்படும் போதே நீர் பிரச்சனையை தீர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் ஆரம்பித்துள்ள கருதங்களை திட்டம் மூலம் கொழும்பின் தென் பகுதிக்கான நீர் விநியோகம்

உலகில் இனம் காணப்பட்ட நோய்களில் 88மூ கத்தமான நிரை உட்கொள்ளாமையும் சுகாதாரமான கழிப்பிட வசதிகளை பயன்படுத்தாமையுமே ம காரணம் ஆகும்.

மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இனி வரும் காலங்களினல் மழை நீரை சேகரித்து பயன்படுத்தும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமையளிப்பதற்கு அரசாங்கம் நீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இயற்கையின் கொடை நீர். உணவின்றி சில வாரங்கள் மட்டுமே வாழலாம் ஆனால் நீரின்றி சில நாட்கள் மட்டுமே வாழலாம். சீனாவில் 44.4 வீதமான மக்கள் அகத்த நீரையே பருகுகின்றனர். சிக்கனமாக ஒவ்வொருவரும் நீரைப் பயன்படுத்துவதன் மூலமே அபாயத்திலிருந்து விடுபட முடியும்.

மன்னார் மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கான அரவணைப்பு

யுத்த சூழ்நிலை காரணமாக ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்துள்ள மாவட்டங்களில் ஒன்றே மன்னார் மாவட்டம் ஆகும். 40ற்கும் மேற்பட்ட அரச சார்ப்ற்ற நிறுவனங்கள், அரசாங்கம், சமய அமைப்புகள் என்பன இம்மாவட்டத்தில் பணிபுரிகின்றன. இது குறித்து மன்னார் மறை மாவட்ட அருட்தந்தையும் அரச சார்ப்றற நிறுவனங்களின் இணையத் தந்தையுமான அருட்தந்தை விக்டர் சூசை அவர்களை தேர்கண்டபோது அவர் தெரிவித்த கருத்துக்களின் தொகுப்பு.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கும், கஷ்டத்தில் இருக்கின்ற மக்களுக்கும் சேர்ச் என்ன வகையான உதவிகளை வழங்குகிறது?

ஆரம்பத்திலிருந்து மன்னார் திருச்சபை இடம்பெயர்ந்தவர்களுக்கு சிறப்பான பணியாற்றி வருகின்றது. குறிப்பாக உடனடியான நிவாரணங்களை வழங்குதல், அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளுதல், கைதுகள் செய்யப்படும் பொழுது அவர்களுக்காக பரிந்துரைத்து அவர்களை விடுதலை செய்தல், அனாதரவாக விடப்பட்டவர்களுக்கான ஆதரவு, குறிப்பாக பெற்றோரை இழந்திருக்கின்ற பிள்ளைகளை நல்வழிப்படுத்தி அவர்களுக்கான நல்வாழ்வழித்தல் போன்ற பல விதமான பணிகளை மன்னார் திருச்சபை மேற்கொள்டு வருகின்றது.

கல்வி சம்மந்தமாக பிள்ளைகளுக்கு என்ன வகையான உதவிகள் கொடுக்கப்படுகின்றன?

கல்வியைப் பொறத்த மட்டில் முன்பள்ளி ஆசிரியர்கள் அதாவது ஆங்கிலத்தில் Nursery Teachers என கூறப்படுகின்றது. இப்படியாக 90ற்கும் மேற்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கிராம மட்டங்களில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்துடன் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கான கல்வி யுதவி மற்றும் பல்கலைக்கழகங்க ளுக்கு செல்லுகின்ற மாணவர்களுக்கான பல்கலைக்கழக நிதி வழங்கல் போன்ற பல உதவிகளை மன்னார் மறை மாவட்டம் மானவர்களின் கல்வி நலன் கருதி செய்கின்றது.

இது போன்ற உதவிகளை ஏனைய அரச சார்ப்ற்ற நிறுவனங்களும் செய்கின்றன. அதிலிருந்து என்ன பணிகளில் ஆலயம் வித்தியாசப்படுகிறது?

மன்னாரைப் பொறுத்தமட்டில் 40ற்கும் மேற்பட்ட அரச சார்ப்ற்ற நிறுவனங்கள் பணிபுரிகின்றன. அத்தோடு திருச்சபையும் பணியாற்றுகின்றது. இதில் திருச்சபை

மன்னார் மறை மாவட்ட அருட்தந்தையும் அரச சார்ப்ற்ற நிறுவனங்களின் இணையத் தந்தையுமான அருட்தந்தை விக்டர் சூசை

எவ்வாறு வேறுபடுகின்றது என பார்த்தால் திருச்சபையை பொறத்த மட்டில் அது ஆன்மீக பலத்தோடு இந்த பணியைச் செய்கின்றது. கூடுதலாக மக்களோடு

உடனடியான நிவாரணங்களை வழங்குதல் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளுதல், கைதுகள் செய்யப்படும் பொழுது அவர்களுக்காக பரிந்துரைத்து அவர்களை விடுதலை செய்தல், அனாதரவாக விடப்பட்டவர்களுக்கான ஆதரவு, குறிப்பாக பெற்றோரை இழந்திருக்கின்ற பிள்ளைகளை நல்வழிப்படுத்தி அவர்களுக்கான நல்வாழ்வழித்தல் போன்ற பல விதமான பணிகளை மன்னார் திருச்சபை மேற்கொண்டு வருகின்றது.

உடனிருத்தல் மக்களைத் தேற்றுதல், மக்களுக்காக எந்த நேரமும் தயாராக இருத்தல் என ஒரு ஆன்மீக சக்தியோடு செயற்படுவதன் மூலம் ஏனைய நிறுவனங்களிலிருந்து வேறுபட்டு இருக்கின்றது.

NGOs உம் சேவை செய்கிறது அரசாங்கமும் ஏதோ ஒரு வகையில் நிவாரணப்பணிகள் செய்கின்றது. எது மக்களுக்கு தேவையானதை ஒழுங்கான முறையிலே வழங்குகிறது.

மன்னாரைப்பொறத்த மட்டில் மூன்று விதமான துறைகளைச் சார்ந்தவர்கள் வேலை செய்கின்றார்கள். ஒன்று அரசாங்கதை சார்ந்தவர்கள் இரண்டாவது அரச சார்ப்ற்ற நிறுவனங்கள் மூன்றா வது சமய அமைப்புக்கள் என்பன ஆகும். மூன்று துறையினருமே தங்களாலல் இயன்ற அளவு பணியை மனனார்களுக் செய்கின்றார்கள். ஆபத்தும் அவசரமுமான இக் கட்டான ஒரு சூழ் நிலையில் மூன்று துறைகளும் இணைந்து இந்த பணியை வெற்றிகரமாக மேற்கொள்கின்றன.

ஒருவருக்கு ஒருவர் துணையாக இருந்து இந் தப் பணியிலே உற்சாகத் துடன் ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றோம்.

சமுதாயத்திற்கு எதிர்காலத்தில் என்ன செய்யலாம் என நீங் கள் உத்தேசித்துள்ளீர் கள்?

இந்த மாவட்டத்தில் ஒரு சம்பவம் நடத்தால் அதற்கு விளைந்து செயற்பட முற்படுகின் றோம். இங்கு மக்கள் அமைதியா கவும் கௌரவமாகவும் வாழ்வ தோடு தங்களுடைய அன்றாட கடமைகளை அவர்கள் செய்ய வேண்டும் என செயற் படுகின்றோம், அபிவிருத் தினில் ஈடுபடவேண் டும். இதற்காக அவர்க ளுக்கு எங்களால் ஆன சகல உதவிகளையும் செய்வோம். எங்களை அர்ப்பனித்து நாங்கள் இந்த துறையில் ஈடுபட விளைகின்றோம்.

தகவல் பெட்டி — இலங்கையில் மனிதாயிமான மற்றும் அபிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல் கோட்பாடுகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாயிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரபோகிக்கப்பட்ட கூடிய அனைத்து சர்வதேச நியமங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதாயிமான மற்றும் அபிவிருத்தி உதவிகளை செயற்திறனுடன் அமும் படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்ட கையொப்பமிட்டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் கீழ் கையொப்பமிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமும்படுத்தும் பங்களர்கள் என்போர் (சர்வதேச/உள்ளூர் அரசாசார் மற்றும் ஸ்தாபனங்கள், ஐ.நா, செஞ்சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

1. **மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவியின் குறிக்கோள்:** இலங்கை மக்களின் வாழ்க்கைத்தரதை மேம்படுத்துவதில், பங்களிப்பதற்கு நாங்கள் ஒன்றிணைந்து பணியாற்றுகின்றோம். எங்கள் உதவிகள் மக்களின் வேதனையை தீக்குதல், வறுமையை ஒழித்தல், இலங்கையின் மோதல் நிலைமைகளுக்கு அமைதியான தீர்வொன் றிற்கு ஆதரவளித்தல் உட்பட சமூகங்கள் தன்னிறைவை அடைய உதவுதல் போன்றவை குறித்துக் கவனம் செலுத்துகின்றன.
2. **பாரபட்சமின்மை:** இடவமைவு, இனம், பால்நிலை, சமூக அந்தஸ்த்து அல்லது மதம் என்பவற்றைக் கருதாது இனங்காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில் மட்டுமே நாங்கள் உதவிகளை வழங்குகிறோம்.
3. **பக்கச்சார்பின்மை:** எங்களது உதவிகள், வழங்கல்கள், வாகனங்கள், வசதிகள் அல்லது உபகரணங்கள் என்பன எந்தவொரு இராணுவ, அரசியல் அல்லது பிரிவினை நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படுவதனை ஏற்றுக் கொள்ளாதுடன் நாங்கள் பக்கச்சார்பின்மையுடன் இருப்போம்.
4. **மனித கௌரவத்தை மதித்தல்:** சர்வதேச மனிதாயிமானச் சட்டம் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் சட்டம் என்பவற்றுக்கான மதிப்பளித்தலை நாங்கள் வேண்டுகிறோம். நாங்கள் உள்ளூர்ச் சமூகங்கள் வெளிப்படுத்திய விருப்புகளின் விளைவாக பணியாற்றுவதுடன் மக்களது கௌரவம், அவர்களது கலாசாரம், மதம் மற்றும் பாரம்பரியங்களை மதிக்கின்றோம்.
5. **ஒளிவு மறைவின்மை மற்றும் பொறுப்புக் கூறல்:** நாங்கள் உதவி செய்ய நாடுபவர்களுக்கு நாங்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்களாவோம். எங்களது உதவிகள் ஒளிவு மறைவு இல்லாதவை என்பதை நாங்கள் உறுதிப்படுத்துவோம். அபிவிருத்தி அல்லது மனிதாபிமான உதவிகளுக்கான வழங்கல்கள் அல்லது உபகரணங்களில் ஊழல் ஏதேனும், களவு அல்லது துஷ்பிரயோகங்களை அனுமதிக்கமாட்டோம்.
6. **நிலைத்து நிற்றல் மற்றும் தயாரப்படுத்தல்:** உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் எங்களது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதுடன் உள்ளூரில் கிடைக்கும் வளங்களை அதிகரிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளோம். சிவில் சமூகங்கள், வர்த்தக சமூகங்கள், உள்ளூர் அதிகார சபைகள் போன்ற உள்ளூர் அமைப்புக்கள், தற்போதைய தேவைகள் குறித்து கவனம் செலுத்த மற்றும் எதிர்கால அவரர நிலைமைகளைத் தவிர்க்க அல்லது எதிர்கொள்ளத் தயாரானதற்கு வலுவூட்டுகிறோம்.
7. **ஆலோசனை மற்றும் பங்குபற்றல்:** நாங்கள், சமூகங்களை அவர்களது நன்மைகளுக்காக அமும்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைக்க, திட்டமிட, முகாமைத்துவம் செய்ய, நடைமுறைப்படுத்த மற்றும் மதிப்பீடு செய்வதில் அவர்களை ஈடுபடுத்து வதற்கு நாடுகிறோம்.
8. **ஒருங்கிணைத்தல்:** நாங்கள், எங்களது செயற்பாடுகளை அரசாங்கம் மற்றும் தொடர்புடைய அனைத்து அக்கறையாளர்களுடனும் ஒவ்வொரு மட்டத்திலும் ஒருங்கிணைக்கின்றோம்.
9. **வழிவகைகள்:** உதவி தேவைப்படும் அனைத்து மக்களுக்குமான அடிப்படைத் தேவையாக கட்டுப்பாடுகளற்ற வழிவகைகளை நாம் வெளிக் கொர்கின்றோம். மனிதாபிமான பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஊழியர்களுக்கான அதிகாரத்தை விரைவில் வழங்குவதையும் சங்கப்படுகுதியிலிருந்து வெளிக்கொண்டு வருவதையும் நாம் எதிர் பார்க்கின்றோம்.
10. **பாதுகாப்பு, பத்திரமும்:** சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகளிடமும் முகவர் ஸ்தாபனங்கள் மற்றும் அவர்களது ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் கருந்திரத்தை தற்காத்து பாதுகாப்பை மேம்படுத்துமாறு வேண்டுகிறோம். ஊழியர்கள் வன்முறை, கடத்தப்படல், தொந்தரவு அல்லது அச்சுறுத்தல்களுக்கு ஆளாகுவதை நாம் அனுமதிக்கமாட்டோம். எங்களது பணிகளுடன் தொடர்புகளற்ற ஆட்கள் அல்லது பொருட்களை போக்குவரத்து செய்வதற்கு எங்களது வாகனங்கள் உபயோகப்படுத்தப் படல் கூடாது.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்ப்ற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்களது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற்படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்டவலுவான ஆவணமோ அல்ல.

அறிவோம் தெரிவோம்

அடிப்படை சுகாதாரம் தொடர்பில் ரேடார் அமைப்பு மற்றும் ஊர்யு அமைப்பின் மாவட்ட கற்றல் துணை அலுவலர் சுசாந்தி கோபாலகிருஷ்ணன் வழங்குகிய கருத்துக்கள் இங்கு தொகுத்து வழங்கப்படுகின்றது.

ஞாநசாந இனுடைய மற்றுமொரு தொழில்நுட்ப துறையானது அடிப்படை சுகாதார சேவைகளுடன் தொடர்புபட்டுள்ளது. இந்த தொழில்நுட்ப துறையானது ஒருவருடைய ஆரோக்கியமான வாழ்வுடன் தொடர்புபட்டு அமைவதாக இருக்கின்றது. ஏனைய துறைகள் குறிப்பிட்டு இருக்கின்றவாறு இடரினாலே பாதிக்கப்பட்டுள்ள ஒருவருடைய கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையுடன் கண்டிப்பாக ஒவ்வொருவருக்கும் ஆரோக்கியமான வாழ்விற்கு உரிமையுண்டு என்பதனை உரிய சட்டங்களும் மனித நேய சாசனமும் வழியுறுத்தி நிற்கின்றது. இதன் அடிப்படையில் நாம் அனைவரும் இதற்கு உரித்துடையவர்கள். ஒருவருக்கு தேவையான தூய நீர், சிறந்த சுகாதார சு??முல் மற்றும் வயது உடல் தன்மை என்பவற்றுக்கு அமைய தேவையான சத்துணவுகள் மற்றும் சு??ழ்நிலைகள் சுற்றுப்புறச் சு??ழ்நிலைகள் இதற்கு அடுத்தாக ஆரோக்கிய வாழ்வுடன் தொடர்புபட்ட போதிய கல்வி வசதிகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட தேவையான தகவல்களை பெறக்கூடிய வசதிகள் மேலும் பாராபட்சமில்லாத சுகாதார வசதிகள் என்பனவும் இங்கு கருத்தில் கொள்ளப்படும். இந்த விடயங்கள் எல்லாத்தையும் இவ் ஆரோக்கியமான வாழ்விற்கான உரிமை கருத்தில் கொண்டு அமைந்துள்ளது.

பாதிக்கப்பட்டுள்ள ஒருவருடைய கௌரவத்துடன் வாழ்வதற்கான உரிமையுடன் கண்டிப்பாக ஒவ்வொரு வருக்கும் ஆரோக்கியமான வாழ்விற்கு உரிமையுண்டு என்பதனை உரிய சட்டங்களும் மனித நேய சாசனமும் வழியுறுத்தி நிற்கின்றது

மேலும் உலகலாவிய ரீதியில் தொடர்புபட்ட சில கொள்கைகள் மற்றும் அடிப்படை விழுமியங்கள் போதிய நியமங்கள் என்பவற்றை கடைபிடிக்க வேண்டும் என்பதை எரிநசநா ?சமூகநஉவ குறிப்பிட்டு நிற்கின்றது.

சுகாதார சேவைகளுடன் தொடர்புபட்ட துறையானது மூன்று முக்கிய உப பிரிவுகளாக பிரிக்கப்பட்டு சில விஷயங்களை கவனத்தில் கொள்கின்றது. அதில் ஒன்று ஆரோக்கிய வசதிகளும் அதனுடைய உட்கட்டமைப்பு வசதிகள். அடுத்தது பரவும் நோய்களை எவ்வாறு தடுக்க முடியும் என்பது, மூன்றாவது பரவும் தன்மையற்ற நோய்களை எவ்வாறு கட்டுப்படுத்த அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறலாம் என்பது பற்றியும் குறிப்பிட்டு நிற்கின்றது. எனவே இந்த மூன்று விஷயங்களுக்கும் உரிய நியமங்களும் உரிய குறிகாட்டிகளும் உரிய வழிகாட்டி குறிப்புகளும் இத்துறையில் கூறப்பட்டுள்ளது.

INTERNEWS
வேர்ல்ட் லாஜிஸ்டிக் (LifeLine) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது
USAID FROM THE AMERICAN PEOPLE

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்-ராஸ் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.